ஓலை 36 | ஓசை 138 | ஏப்ரல் 2023

அகரம் முதல இலக்கியப் பேரவை
அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை**
**மாற்றுவா ராற்றலிற் பின்.**

வல்லவர்க்கு மேலும் வலிமை, தமது பசியைப் பொறுத்துக் கொள்வதே அந்த வலிமையும், பிறர் பசியைப் போக்குபவரின் வலிமைக்கு அடுத்துத்தான் வலிமையாய் அமையும்.

**Translation:**

'Mid devotees they're great who hunger's pangs sustain, Who hunger's pangs relieve a higher merit gain.

**Explanation:**

The power of those who perform penance is the power of enduring hunger It is inferior to the power of those who remove the hunger (of others).

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல
## இலக்கியப் பேரவை

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்


### அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

Aagaramuthalaa  www.அகரமுதல.com  aagaramuthala@gmail.com

# பாவேந்தரும் பைந்தமிழும்

தமிழ்கூறு நல்லுலகில்
தோன்றிய பாவேந்தர் பாரதிதாசன்
தன்னுடலில் உயிராகி
தன்னை இயங்க வைப்பது தமிழென்றார்.

வாழ்வினில் செம்மையைச் செய்பவளே
வீழ்வாரை வீழாது காத்திட உதவிடுவாய்
சூழும் இடரதனை நீக்கி,நீ
சூழ்ந்தே இன்பத்தை நல்கிடுவாய்.
தமிழே உன் பெயர் தான் அமுது.
தண்ணென்று ஒளி வீசும் நிலவும் நீயே.
தமிழரின் நெஞ்சில் தமிழெனும்
மணிவிளக்கு ஏற்றிடுவாய்.
கவிதையை வைரம் பொருந்தும்
வாளாக்கிடுவாய்.
என் செயலாய் இருக்கும் நீ
என் வாழ்வு நைந்திடாமல் காத்திடுவாய்.
நன்னிலை உனக்கு வந்தால்
நானும் மகிழ்வேன் நாளும் தானே!



செந்தமிழ் சொல்லைப் போற்றிட
அல்லலும் பகையும் நீங்கும்.
வல்லமை சேரும். வாழ்வும் வளமாகும்.
அறிவுக்குத்தோள் கொடுத்தே
பிறவிதோறும் நம்மை ஆற்றலுடன் வாழ வைக்கும்.
பரந்து விரிந்த வானமே, தமிழே
உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு
என்றே வாழும் வாழும் என்னை
நன்றே வளர்த்தாய்,நானிலம் பயனுறவே.
தமிழுள்ளவும் தரணியில்
தன் பெயரைத் தரமாய்ப் பொறித்திட்ட தங்கத் தமிழனே!
உன் தமிழுக்குத் தலைவணங்குகிறேன், நான்.

கவிஞர் செ.கலைவாணி,மெல்பேர்ன்

# நெற்றி பிறந்தான்

(எண்சீர் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம் )

பெண்தாங்கா மகவொன்று பெரும்பார் பூப்பின்
பெருமூச்சு நின்றொழிய உறுதி வேண்டி
அண்டங்கள் ஆயிரத்தெட் டாள சூரன்
அவிநாசி யப்பனிடம் வரத்தைப் பெற்றுக்
கண்மூடும் செருக்கோங்க கனலை வீசக்
கலைந்தோடும் தேவர்கள் சிவன்தாள் பற்ற
அண்டன்தன் நுதற்கண்ணின் ஆரல் சிந்த
ஆறுமுகன் வளிஉதவ பொய்கை பூத்தான்.

மகவு - குழந்தை ; அண்டன் -கடவுள் ;
நுதல் - நெற்றி ; ஆரல் - நெருப்பு



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# குருவிகள்

அப்பா நான்தான் அரிசியை போட்டிருக்கிறேன்
இப்பக் கூட நிறைய குருவி இங்க வந்துச்சுப்பா
இப்ப நம்ம எல்லாரும் இங்கிருந்து போயிட்டோம்னா
அந்த குருவியெல்லாம் இரைக் கொத்த ஆரம்பிச்சுரும்பா
ஏன்னா குருவி எல்லாம் சுத்தி தாம்பா நிக்குது
இங்க பாருங்க நிறைய அரிசியை
வந்துக் குருவி தின்னுடிச்சி
என்று மகன் சொன்னதும்
நானும்
அரிசி சிதறிய வண்ணமேக் கிடைப்பதைப் பற்றிய
யோசிக்கிறேன்
மகனும்
அரிசி எண்ணிக்கையில்
குருவிக்கு கொஞ்சம் போயிருக்கிறது என்பதில் சந்தோசமாகவும்,
உறுதியாகவும் இருக்கிறான்.
மகனின் சந்தோசத்தைக் குலைக்க
விரும்பாத தந்தையாய் நானும்
அரிசியை எண்ணுகிற வேலையை
விட்டுவிட்டேன்

அல்லது
ஒருவேளை
குருவிகளுக்கும்,மகனுக்கும்
உள்ள மனத்தொடர்பில்
அரிசிகளின் எண்ணிக்கையை
என்னால்தான்
சரியாக எண்ண முடியாமல் போய்விடுகிறது



கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# அன்னை மனம் தங்கமன்றோ

அன்னைத் தமிழை
அமுதென ஊட்டிட

மழலை உச்சரித்திடும்
முதல்வார்த்தையும் அம்மா

வளரும் பருவத்தில்
வாழ்த்திய நெஞ்சமே

மனதில் பதிந்த
முதல்முகம் நீதானே

உண்டதை உதிரமாக்கி
என்னுதிரமாய் கலந்தவளே

கருவினில் துளிர்த்ததுமே
பத்தியங்களால் பசிமறந்தவளே

ஊருறங்கும் வேளையில்
உறங்காதும் எனைச்சுமந்தவளே

வலித்திடும் வலிகளுக்கு
விடையறியாமல் விழித்தவளே

தொப்புள்கொடி சொந்தமென்னை
தாலாட்டி வளர்த்தவளே

அக்கறையில் மாறாத
உன்மனமும் தங்கமன்றோ

கேட்டதெல்லாம் வாங்கித்தந்து
மனதுக்குள் மகிழ்ந்தவளே



அன்புமழையில்
உன்னை மிஞ்சிடத்தான் எவருமில்லை

மானிடப்பிறவி மீண்டுமிருப்பின்
கடவுளிடம் முறையிடுவேன்


என்மகளாக அன்னையே
பிறந்திடும்வரம் வேண்டுமென

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# கல்வி

(அதிகாரம் : 40)

தகுதியின் நூல்பல
பழுதின்றி படி.
படித்ததை செயல்படுத்து
தகுதியின் ஒழுக்கப்படி.




எண்ணென்ற கணிதமும்
எழுத்தென்ற கலையும்.
இவ்வுலகின் மக்களுக்கு
கண்ணென்று கொள்ளப்படும்.

கற்றாரே கண்ணுடையராய்
உயர்வாகக் கொள்ளப்படுவர்.
மற்றாரின் முகத்திலிருப்பது
இருபுண்கள் மட்டுமேயாம்.

மகிழ்வொடு கூடிக்களித்தபின்
எப்போதினி கூடுவோமென்று.
வருந்திப்பிரிவதே கற்றோராம்
புலவர்களின் தொழிலாகும்.

செல்வர்முன்பணியும் எளியோர்போல்
ஆசான்முன்பணியும் கற்றோரே.
சிறந்த கல்வியாளராம்
கல்லாதோர் இழிந்தோராவர்.

கிணற்றின் ஆழத்திற்கேற்ப
அதனூற்று ஓங்கிசுரக்கும்.
கல்வியின் ஆழத்திற்கேற்ப
அறிவும் சிறந்துசுரக்கும்.

கற்றார்க்கு எவ்விடமும்
தன்நாடும் ஊரும்போலாகும்.
எனிலொருவன் சாகும்வரை
கல்லாமல் கழிப்பதேனோ?.

ஒருபிறப்பில் கற்றகல்வி
ஒருவனுக்கு அவனெடுக்கும்.
எழுபிறப்பிலும் கூடவந்து
உதவும் தன்மையதாகும்.

தாமின்புறும் கல்வியால்
தரணியெலாம் இன்புறக்கண்டு.
கற்றறிந்த நல்லறிஞர்
மென்மேலும் கல்விகற்பர்.

அழியா சிறந்தசெல்வம்
கல்விச் செல்வமேயன்றி.
மற்ற பொருட்செல்வமெல்லாம்
சிறப்பில்லாது அழிந்துபோவதாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# அச்சம்

என் சொற்களை
ஒருவர் தலைமேல் சுமையாய்
சுமந்து செல்லலாம்
அடுத்தவர்
தோளில் தூக்கி நடக்கலாம்
இன்னொருவர்
குழந்தையாய்ப் பாவித்து
இடுப்பில் சுமந்து திரியலாம்
வேறொருவர்
நடைக்குத் துணையாய்
ஊன்றுகோலென உடன்
எடுத்துச் செல்லலாம்
அடுத்தொருவர்
அதைப் பேச்சுத் துணை
நண்பனாகப் பாவிக்கலாம்
உங்களில் யாரேனும் ஒருவர்
அதைக் காலால்
மிதித்துச் செல்லலாம்
பிறர் சொற்களை பத்திரமாக
நெஞ்சில் சுமக்கும்
எனக்குக் கவலை யாதெனில்
ஆத்மார்த்தமான என் சொற்கள்
உங்கள் நெஞ்சை
வருடிக் கொடுக்க
தவறிவிடுமோ என்ற
அச்சம் பீடிக்கிறது என்னில்!



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# காலமெனும் கல்விக்கூடம்



விரல் பிடித்து கற்று
தந்த மழலை பள்ளி ஆசிரியர்.
அழ அழ பள்ளியில் தூக்கி கொண்டு விட்ட
பெற்றோர்.
மழலை பருவம் முடிந்து
தொடக்க பள்ளியில் சேர.
மஞ்சள் பையில் சிலேட்டும் கடற் குச்சியும்,
வைத்து எழுதியதை மறக்க முடியுமா.
ஓடியாடிய பருவம் கவலையில்லா பருவம்.
நடுநிலைப் பள்ளியில்
தோழிகள் நட்பு வட்டம்.
சிவப்பு மையால் நன்று வாங்கிய பருவம்.
மாங்காய் திருடி பள்ளி செல்கையில் திருடி தின்னப் பருவம்.
அமரும் இருக்கையில் சுண்ணக்கட்டியால் பெயர் எழுதிய பருவம்.
கல்விக் கட்டணம் செலுத்த முடியாமல்
நின்ற பருவம்.
காமராசர் ஆட்சிக்கு வர
எல்லாமே இலவசமானது.
ஏழைகள் மகிழ்ச்சி வெள்ளத்தில் திகைத்தாரே.
இலவசக்கல்வி மதிய உணவு அமர்க்களமானதே.
மேல் நிலைப் பள்ளியில் எனக்கு எல்லாமே இலவசமானதே
கற்றேன் கல்வியை எண்ணிலா மகிழ்ச்சி.
மழலை பள்ளியில் கற்றுக் கொடுத்த ஆசிரியர் ஞாபகம் வர
அவரை காண ஓடினேன்
கட்டி தழுவி முத்தமிட
ஒரே வார்த்தை எப்படி இருக்கிறாய் எனக் கேட்டவுடன்
நான் செய்யும் குறும்புதான் எனக்கு ஞாபகம் வருகிறது.
கற்றுக் கொடுத்த ஆசிரியரையும்
கற்று தந்தப் பாடத்தையும் மறக்க கூடாது.
வாழ்வில் நீங்காத நினைவலைகள்
கல்விக்கூடம்.

கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# நெஞ்சுக்குள்ளே

நெஞ்சுக்குள்ளே ஒநெனப்பு
நெருஞ்சி முள்ளாக் குத்துதய்யா

கஞ்சிக் கலையம் தலையில் வெச்சு
களத்து மேட்டுக்கு வரும் போது
கொஞ்சிப் பேசி என் மனசை
கொள்ளை கொண்ட மச்சானே

அள்ளி அணைக்க ஆசைப்பட்டு
அக்கம் பக்கம் திரும்பிப் பார்த்து
கிள்ளி கொஞ்சம் பார்க்க வேண்டி
கிணத்து மேட்டில் ஒளிஞ்ச மச்சானே

காத்து வாக்கிலே செய்தி ஒன்னு
களத்து மேட்டுலே இப்பே சுத்துதய்யா
நெஞ்சுக்குள்ளே அந்த நெனப்பு
நெருஞ்சி முள்ளாக் குத்துதய்யா



கவிஞர் கரு.கிருஷ்ணமூர்த்தி

# கடுமையான வெயில்

நேரடியாக உச்சி வெயில் தாக்கும் நேரங்களில்
வெளியில் செல்லாதீர்கள் - என்ற
மருத்துவர்களின் எச்சரிக்கைகள்

எந்தெந்த பழங்களை உண்ண வேண்டும்
எப்பொழுதெல்லாம் உண்ண வேண்டும் - என்ற
உணவியல் நிபுணர்களின் அறிவுரைகள்

ஏசி வாங்கி விடலாமா?
ஏர்கூலர் போதுமா? - என்ற
குடும்பத் தலைவர்களின்
குழப்பங்கள்

கோடை சுற்றுலா எங்கு செல்லலாம்?
கோயில் குளங்களும் இருக்க வேண்டும்,
குளுகுளுப்பும் இருக்க வேண்டும் -என்ற
குடும்பப் பெரியவர்களின் எதிர்பார்ப்புகள்

தினமும் கூல்ட்ரிங்க்ஸ் வேண்டும்,
தீரா குளிர்ச்சி கொண்ட பிரிட்ஜில் ஐஸ் வேண்டும் - என்ற
குட்டிக் குழந்தைகளின் ஆசைகள்

இதையெல்லாம் கண்டு கொள்ளாமல்
தோளில் வெறும் துண்டுடன்
மண்வெட்டியை தூக்கிக் கொண்டு
வயலுக்குக் கிளம்பினார் அந்த விவசாயி.

விவசாயம் காப்போம்!
விவசாயி போற்றுவோம்!



கவிஞர் மரு.சு.டேனியல் ராஜ சுந்தரம்,வீரிருப்பு,சங்கரன் கோவில்

# புள்ளியானது கோடுகளாய்

வெற்றியின் புன்னகைக்கு
வியர்வையின் ஈரப்பதம்
ஆணிவேரா சல்லிவேரா
என்பது கேள்விக்குறி

வறுமைக்கு சல்லடையிட்டு
நுழைகிறது பசி
சாலைகளை ஆக்கிரமிக்கிறது
வயிறு நிரம்பிய மிச்சங்கள்

கையேந்துபவனுக்கு கரம்
முழுவதும் ஏக்கரேகைகள்
பை நிரம்பியவனின்
கரமெல்லாம் இல்லாக் கோடுகள்



நவ துவாரங்களுக்கு
காரணம் நூறு
ஒரு துவாரமும்
வழங்கவில்லை இயல்பை

சிறிய கோடு
பெரிய கோடாகலாம்
சுண்ணாம்புக்கட்டியை
இறுக்கப்பற்றிடுதல் முக்கியம்

கவிஞர் சே கார்கவி கார்த்திக்,நாகப்பட்டினம்

# காலத்தைக் காதலி

காலம் நமக்காகக்
காத்திருக்கப் போவதில்லை
சொத்துக்கள் போன்று
பாதுகாத்திட முடிவதில்லை

முத்தான நிமிடங்களைப்
பொத்திவைக்க முடியாது
வீணாக்கிய நிமிடங்களை
மீட்டெடுக்கவும் முடியாது

இன்றைய பொழுதுகளை
ஆறப்போட்டு ஒதுங்காதே
உறங்கிக் கழித்து
உல்லாசம் காணாதே

காலத்தே பயிரிட்டு
விளைச்சலை அனுபவித்திடு
நாளும் விடியல்கள்
நலமாய் அமைந்திடும்



கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை

# தாகம்

ஒவ்வொரு மனிதன் வாழ்க்கையிலும்
சொல்ல முடியாத கற்பனைக்கு
அப்பாற்பட்ட சொல் தாகம்.
நிலையில்லாத நிர்பந்தத்தில்
ஒவ்வொரு நொடியும்
மரணத்தை தழுவும் கரங்களும்
பிறப்பை ஈன்று கொண்டிருக்கும் உள்ளங்களும்



வாழ்க்கையின் வளர்ச்சியின் பின்னால்
சூழ்நிலை செயல் - தாகம்.
யாருக்கென்று யார் என்று
நான் இல்லை நீ என்று
வழி ஒன்று எங்கே அன்று
அதைக் கண்டு சிந்தனை கொண்டு
தீர்க்க முடியாத நிபந்தனைகளை கண்டு
குருதி கலம் ஒன்று
பிரபஞ்சத்தில் தினம் தினம்
புரியாமல் புதிராய் காலத்தில் உண்டு

மண் மீது தாகம்
மரணம் மீது தாகம்
வலி மேல் தாகம்
வாழ்க்கை மேல் தாகம்
பிறர் மீது தாகம்
நிலை மீது தாகம்

ஒவ்வொரு கதைகளின் தொடக்கம்
இறப்புகளின் துவக்கம்
இதுதான் மனித வாழ்வின் மாண்பு
இதில் நிறைவேறியது நிறைவேறாதது
சொல்ல முடியாத துயரங்களின்
சோக கதைகளாகவே முடிவடைகிறது
சிலர் வாழ்க்கையில்

தனிமை சிறையின் வலியின் துவக்கம்
தாகத்தின் ஆரம்பம்
புதுமொழி இல்லா புண்பட்ட நெஞ்சங்களின்
மோக அறை! தாக நிலை! பின் நாட்களில்
ஒவ்வொரு நிலைப்பாட்டிலும்
ஒவ்வொரு நிபந்தனை கூற்றிலும்
சொல்ல முடியாத தீக்கதிர்கள்
தீமைகளின் அவைகள் தனிப்பட்ட மனிதனின்
மனநிலை தாக நிலை

தாகம் தன்னலமற்றது
தாகம் சுயநலமற்றது
தாகம் உணர்வுபூர்வமானது
தாகம் ஒரு நிலையானது
தாகம் அவர் தனிப்பட்ட உரிமையானது
தாகம் அவர் வலியால் வந்த நிலையின் துவக்கம்
அவரவர்களின் மனதின் தனிமை அறையின் தாகம்
தாகம் ஒருவரின் ஆரம்பம் அல்ல
அவர் மனதின் ஆயத்தம்?

கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தப்பூர்

# துணிந்தெழு மனிதா!

துணிந்தெழு மனிதா உனக்கான உலகத்தில்
உலகத்தில் திறமையின் வழி உனது
உனது முயற்சி தரும் வெற்றி
வெற்றி என்றும் உனக்கே சொந்தம்
சொந்த முயற்சியில் முன்னேற முயன்றிடு
முயன்று முன்னேறிய மனிதர்கள் யாவரும்
யாவரும் முழு
உலகிற்கும் வழிகாட்டியே
வழிகாட்டியே நீயாக மனிதா துணிந்தெழு.



கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் (இலங்கை)

# சாதி

ஆரம்ப காலத்திலேயே
ஆண்களுக்கிணையாக
தன் வாழ்க்கைத்துணையை
சுயமாக சிந்தித்தே
விரும்பியபடி
மனம் கவர்ந்திட்ட மணாளனை
சுயம்வரத்தில் கண்டனர்
இடையில் அகம்பிடித்த சிலர்
இதனை மாற்றியமைத்தே
இஷ்டம் வெறுப்பை மறுக்க
வழமையாகியே போனதது
வஞ்சியர் தம் வாழ்விலே.
விரும்பியவனை மணக்க
வீடுவிட்டு இறங்கியவரை
விலக்கியே வைத்திட
விவேகமின்மை வீரமாகிட.
ஊட்டி வளர்த்தவர்களே
உயிரை எடுக்கின்றனரே.
தலைகோதியக் கையாலே
தலைக் கொய்ய முடிந்திடுமோ?
ஊன மனமுடையோர் செய்வது
ஆணவக் கொலையாம்.
பெற்ற பிள்ளையைவிட
பெரிதாகிப்போனதோ
இற்றுபோன சாதி?




கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# இல்லாள்

## அதிகாரம் - 6 வாழ்க்கைத் துணை

வரவுக்குள் செலவு செய்து நற்குணங்களைத் தனதாக்கி
இல்லறத்தை நடத்தும்
வாழ்க்கைத் துணை நலமே

நற்பண்புதனை இழந்த இல்லாள் அமைந்தால்
சிறப்பான வாழ்வும் சீர்கெடுமே

நற்பண்பும் நற்செயலும் கொண்டவளை அடைந்தவன்
வாழ்வில் இல்லாததுதான் ஏது?
இவை அமையவில்லை எனில் எல்லாம் இருந்தும் பயனேது?




எதற்கும் ஈடாகாத பெருமைக்குரியவள்
கற்பென உறுதியுடைய பெண்மை

கணவனே கண்கண்ட தெய்வம் என வாழும்
பெண்ணின் வாக்கு சத்திய வாக்கு

இவள் பெய்யென சொன்னால்
அந்த வான்மழையும் இவள் காலடியில்

தன் மணாளனை தெய்வமாக கருதி தெய்வத்தின் வாக்கை விட
தன்னவனின் வாக்கை சிறந்ததெனக் கருதி
தன்னை அடிமை ஆக்கிக் கொள்ளும் பெண்
தனக்கு அடிபணிந்த மழைத்துளிப்போல
தன்னையும் எண்ணி ஆனந்தம் கொள்வாளே

கற்பெனும் புனிதம் பேணி தன்னையும் தன் மணாளனையும்
தமக்கு சேரும் புகழையும் காக்கும்
தளராத உள்ளம் கொண்ட இல்லாள் நலமே

பெண்ணின் ஒழுக்கத்தைக் கற்பைக் காக்க
சிறை காவல் தேவையில்லையே.

தன்னைத்தானே மன அடக்கத்துடன் காக்கும்
இல்லாளின் பண்பு நலமே

அறநெறி, பண்பு, கற்பு, ஒழுக்கம் கொண்ட இருவர் சேர்ந்த இல்லறம்
மேலோகத்தை விட சிறப்பாகுமே

புகழை விரும்பா மனைவியைப் பெற்றவன்
தம்மை இகழ்பவர் முன் தலைநிமிர்ந்த பீடு நடை ஏது?

நல்ல மனைவி மக்களைப் பெற்றவன் இல்லறமே நல்லறம் !
இது பூந்தோட்டமாக பூத்துக் குலுங்குமே!

கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# எது வேண்டும்?

பணம் வேண்டுமா
பாசம் வேண்டுமா
பந்தம் வேண்டுமா

காதல் வேண்டுமா
காமம் வேண்டுமா
கன்னியம் வேண்டுமா

உறவு வேண்டுமா
உதவி வேண்டுமா
உவகை வேண்டுமா

வலிகள் வேண்டுமா
வண்ணம் வேண்டுமா
வாழ்க்கை வேண்டுமா

துரோகம் வேண்டுமா
துணிவு வேண்டுமா
தூய்மை வேண்டுமா

பொய்கள் வேண்டுமா
பெண்ணியம் வேண்டுமா
பொழுதுகள் வேண்டுமா

அன்பு வேண்டுமா
அணைப்பு வேண்டுமா
அதிகாரம் வேண்டுமா

புகழ் வேண்டுமா
புண்ணியம் வேண்டுமா
பூமி வேண்டுமா

சாதி வேண்டுமா
சாதனை வேண்டுமா
சரித்திரம் வேண்டுமா

தாய்மை வேண்டுமா
தாழ்ச்சி வேண்டுமா
தடைகள் வேண்டுமா

முயற்சி வேண்டுமா
முன்னேற்றம் வேண்டுமா
முட்கள் வேண்டுமா

இகழ்ச்சி வேண்டுமா
இதயம் வேண்டுமா
இறப்பு வேண்டுமா

ஏழ்மை வேண்டுமா
ஏற்றம் வேண்டுமா
எழிமை வேண்டுமா

நட்பு வேண்டுமா
நம்பிக்கை வேண்டுமா
நாடகம் வேண்டுமா

உயற்சி வேண்டுமா
உழைப்பு வேண்டுமா
உண்மை வேண்டுமா

மன்னிப்பு வேண்டுமா
மனிதன் வேண்டுமா
மனது வேண்டுமா

அனைத்தும் வேண்டும்
முதலில் வேண்டும்
மனிதம் வேண்டும்

வாழ வேண்டும்
மாற வேண்டும்
வாழ வைக்க வேண்டும்



கவிஞர் பாரதி மைந்தன்,முல்லைத்தீவு (இலங்கை)

# பசி

பசி என்றால் ஆயிரம் அர்த்தம் உள்ளது,
வயிற்றுப்பசி மட்டுமல்ல
இங்கு சிலப்பேருக்கு பல பசி!
மன்னனுக்கோ மணப்பசி
இளைஞனுக்கோ காதல் பசி
கள்வனுக்கோ பொருள் பசி
செடிக்கோ நீர் பசி
கண்களுக்கோ தூக்கம் பசி
சிலபேருக்கோ காமப்பசி
இப்படி ,
பலபேருக்கோ பல பசி.



கவிஞர் பூஜா ராஜ்குமார்

# ரமலான் விமரைக்கூக்கள்

ரமலான் புனித நோன்பு
தூய்மையோர் ஆக கடமை ஆக்கப்பட்டுள்ள
முஸ்லிம்களின் அற்புத மாண்பு

அருள்நிறை ரமலான் மாதம்
அல்லாஹ்வை அதிகம் நெருங்க வாய்ப்பளித்து
இச்சைகள் துறந்திடும் ஆகம்

நோன்பு என்னும் வணக்கம்
பசியோடும், தாகத்தோடும் இருப்பது மட்டுமல்ல
இறையச்சம் ஏற்படுத்தும் இணக்கம்




நோன்பில் ஓய்வெடுக்கும் குடல்
பலவித நோய்களில் இருந்து தப்பித்து
புத்துணர்வு பெறும் உடல்

திறக்கப் படும் சொர்க்கம்
இறைவனை சந்திக்கையில் எழும் மகிழ்ச்சியில்
அடைபடும் சைத்தான்களின் நரகம்

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,திருச்சி(மா)

# மகளின் கல்விக்காக



தாய்
இரவினில் மட்டும்தான் உழைக்கின்றாள்.
அதிலே அயராது உழைக்கின்றாள்.
மூச்சு கூட விடமுடியாமல் உழைக்கின்றாள்.

இறுக்கிப் பிடித்திட்டதோ ஒருவனின் கைகள்.
இறுகிப் போனதோ அவளின் மனசு.
உதடுகளை தாண்டி உச்சரிக்கும் வார்த்தைகளோ
வலியின் கொடுமையால்.
அவன் செவிமடல்களில் விழுந்தும் பயனில்லை

அவனோ உணர்ச்சியின் உச்சத்திற்காக
அவளோ அடுத்த வேளை உணவிற்காக
ரணங்களை எல்லாம் வயிற்றில் ஒதுக்கி வைக்கின்றாள்.
ஆம்! அந்த வயிற்றில் அவள் கண்டிராத வலியா?

நகக் கீறல்கள் பட்ட இடத்தில் வியர்வைத் துளிகள் விழுந்ததும்
அணு அணுவாய் துடிக்கின்றாள்.
இத்துனை வலிகளையும் பொறுத்துக் கொள்ள வேண்டிய அவசியம்.

வெற்று ரூபாய் நோட்டுக்களுக்காக அல்ல.
அந்த ரூபாய் நோட்டுக்களுக்கு பின்னால் இருக்கும்
கல்விக்காக.

கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,சாப்டூர்

# தமிழும் அவளும்

(தமிழைக் காதலியாய் நினைத்து பாடியது)

அவள் அசைவுகள்
என்னை உணர்வுகளுக்காக்கும்
இரட்டை காப்பியக் கம்மல்கள்.

நாகரிகங்கள் கடந்து நாமம் படைத்த
தொன்மை மொழி அவள் விழி.

காதலிற்கும் காமத்திற்கும் நான் இட்ட மூலதனம்
அவள் இதழ்கள்
ஈரடியால் என்னை உள்ளீர்த்த
திருக்குறளென்பேன்




ஐம்பெருங் காப்பியங்களும்
ஐஞ்சிறுகாப்பியங்களும்
அவள் விரல்களென்பேன்

முச்சங்கங்களையும் முறையே
முக்கோணமாய் இணைந்த மூக்கென்பேன்

தாவணி அணிந்த திருப்பாவை
உன் திருமேனியென்பேன்

வாக்குண்டாம் வாசணையை நுகரும்
வாலிப ரசிகனானேன்

ஒற்றையடிப்பாதைகள் ஓரமாய் ஒதுங்கி
களைப்பாற்றி போகும்
இராமாயண இடைகள் என்பேன்

மொத்தத்தில் அவளும் தமிழும் ஒன்று
நித்தமும் படித்தேன்
அவளையும் தமிழையும்
இரண்டுமே நன்று.

கவிஞர் மதீரா (அறிவிப்பாளினி),இலங்கை

# பீட்ஸா

சதுரமான பெட்டியிலே
அம்மாவின் நெற்றிப்
பொட்டு போல்
வட்ட வடிவமாக
பீட்சா!
இளம்பெண்ணின் மேனி
போல பளபளக்கும்!
பார்வையைக் கவர்ந்திழுக்கும்!
கலர்கலராய் உயிர்ப்பில்லாத
காய்கறிகள் பரவலாக!
வழுவழுவென நூல்நூலாக
ஜவ்வு போல் பாலாடை!
உலகமெங்கும் அந்த
வழுவழுப்பில் எழ முடியாமல்
விழுந்து கிடக்குது!
குழந்தைகள் மனதை
கொள்ளை அடிக்குது!
பெரியவர்கள் பையையும்
வயிற்றையும் காலி செய்யுது!
முக்கோணத் துண்டுகளாய்
வெட்டப்பட்ட பீட்ஸா!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# பாதை காட்டும்



பிறர் புன்னகைக்கு
பூக்கள்
கொடுக்கும்போது

உலகே பரிசானாலும்
தன்னிலை
மாறாத போது

உயிருக்கு நிகராய்
ஒழுக்கம்
பேணும்போது

நிதானம் தவறா
நேர்மைகள்
நிமிரும்போது

மரபின் வழி
பண்பாடு
சுமக்கும் போது

மேடு பள்ளங்களில்
பக்குவம்
கடக்கும்போது

மெய்ப்பொருள்களின்
மகத்துவம்
உணரும்போது

துணிவும் பணிவும்
சரியாக
வெளிப்படும்போது

மன்னித்தல்களில்
மானுடம்
தழைக்கும் போது

கருணைப் பார்வைகளில்
தாய்மை
காணும் போது

மனசாட்சியின்
கைகள்
தட்டும் போது

கண்களே
மூடியிருந்தாலும்

உண்மை ஒளி
பாதை காட்டும்

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன், ஈரோடு

# சாதியம் ஒழிப்போம்

ஆண் கையில் அரிவாள் கொடுத்து
போருக்கு போகச் சொன்ன காலங்கள் போயிற்று
மனிதா இனி அரிவாளை எடுக்காதே அறிவாளை எடு
சாதிக்கு போராடு சாதி வளரக்க அல்ல சாதி ஒழிக்க

ஆண்ட பரம்பரை என்றால் மனம் தருமோ மலம்
குற்றப் பரம்பரை என்றால் குருதியின் நிறம் மாறிடுமோ
அரிசனம் என்றால் எரியும் சூரியன் அணைந்திடுமோ
சன்மார்க்க நெறிகள் சாதிக்குள் கட்டுப்பட்டனவோ



இயற்கை வண்ணங்களில் சாதிகளின் பெயர் காட்டுகிறது
அய்யனாரும் கருப்பும் சாதிகளின் அடையாளமாகிறது
முருக்கு மீசைகளும், தாடிகளும் சாதீயம் பேசுகிறது
அரசியலுக்கும் சட்டத்திற்கும் சாதிச்சாயம் பூசுகிறது

இருண்டே கிடக்குது கிணற்றுத் தவளைகளின் உலகம்
இருளின் அடர்த்தியை விட அடர்வானது சாதிய வன்மம்
எம்மதமும் கற்பிக்காத சாதியை எப்படி போதித்தது சமூகம்
சாதி முற்றிய மனிதகுல விதைகளை அகற்றிட வேண்டும்

ஈரெழுத்தில் பேரிடரை தூண்டும் சாதியை அழிப்போம்
ஈரடி, நாலடி வேந்தர்கள் கூற்றின் வழி வாழ்வோம்
வேதங்களை சன்மார்க்க நெறிக்குள் புகுத்துவோம்
வலுவில்லா எதிர்வினைகளாக சாதியினை முடக்குவோம்

துளிரும் இளைய சமூகத்தின் வேரில் சாதி நீரை ஊற்றோம்
அன்பில் செழிக்கும் சமத்துவ நீரை பாய்ச்சுவோம்
பாரதியின் பாரதத்தை பண்போடு சாதியின்றி வளர்ப்போம்
ஒன்றே குலம் எனும் நெறிகொண்டு வாழ்வோம்

கவிஞர் தஞ்சை கங்கை மைந்தன்

# பாவம் மனிதன்

விலங்குகளின் குணங்களை
விளக்கிட முடிகிறது
அதனதன் எல்லைகளை நீக்கி
அடுத்தவர் பண்புகளை
அபகரிப்பதில்லை
பாவம் மனிதன்
எல்லா விலங்கிலும்
ஒளிந்து கொண்டு
எட்டிப் பார்க்கிறான்
ஏதேனும் ஒரு தருணத்தில் மனிதனாக.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# தமிழ்

எண்தொகை பத்துப்பாட்டு என
பண்பாடு வேர்களை கொண்டு
மாந்த வாழ்வை அகமென்றும்
புறமென்றும் அழகாக பகுத்து!

ஈரடி நாலடியில் அறத்தை பதித்து
நாற்பதில் இன்னா உரைத்து
ஐந்திணையில் அன்பை நெய்து
அரவணைக்கும் அமுத மொழி
செவ்வியல் மரபு செம்மொழி
காலத்தில் மூத்த மொழி




கவிஞர் தமிழ் நேயன்.செ

# அன்புக்கரசி

கொட்டும் மழை
குடை பிடிக்க வழியில்லை.

குளிரும் காற்று போர்த்திக்கொள்ள
போர்வையில்லை.


ஓலை குடிசையில் ஒதுங்க இடமில்லை.

சொட்டும் மழைத்துளி
சொடுக்கு விடும் பாத்திரங்கள்.

வழித் துணையாக வாயிற் படியில்
வந்து நின்றது வாயில்லா ஜீவன்.

புதுவரவாக வந்த உறவை
அரவணைத்து அடைக்கலம் தந்தால்
அன்புக்கரசி.

அமுதமும் தோற்று விடும் அவள்
அன்புடன் வைத்த ஒரு பிடி
அன்னத்தின் முன்னால்.



நன்றியுடன் கடைசிவரை அவளின்
வசந்த மாளிகையில் காவலாக தங்கியது.

பெயரில் மட்டுமல்ல அவள் அன்புக்கும் அரசி தான்.

கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# எனது பள்ளி எனது பொறுப்பு

இன்னொரு அம்மா
ஆசிரியரென்று புரியும்
பாசத்துக்கும் பள்ளிக்கூடம்
தேவையென தெரியும்

கருங்கல்லை சிலையாக
கரும்பலகை செதுக்கும்
உளிப்பட்ட இடம்கொஞ்சம்
கல்லுக்கு வலிக்கதானேசெய்யும்



மூடப்பட்ட அறிவுக்கண்கள்
தட்டித் திறக்கப்படும்
படித்து முடித்தல்தான்
பள்ளிக்கூட அருமைத்தெரியும்

தீக்குச்சியின் தியாகமெல்லாம்
மெழுக்குத் தெரியும்
அதனால்தான் கடைசிவரை
கண்ணீர்விட்டே ஒளிரும்

வகுப்பறை என்னும்
கருவறையில் சாதிமத பேதமை
செத்துப்போய்கிடக்கும்.

அங்கே,

இரத்த சொந்தம் இல்லாமல்
ஒரு தொப்புள்கொடி முளைக்கும்.

எனது பள்ளி எனது பெருமை
என்ற கவர்வத்தோடு படிக்கிறேன்.

என்னால் இப்பள்ளியும்
இப்பள்ளியால் நானும்
பெருமையடைவதாக உறுதியளிக்கிறேன்.

காரணம்

எனது பள்ளி எனது பொறுப்பு.

கவிஞர் செந்தமிழ்சுபபாரதி,மதுரை

# அழகோவியம்

மலர்ச் செண்டதன் வடிவம் வரைந்து
மங்கை முகமதை வடித்திட்ட சிறப்பு

ஓவியம் பார்க்கையில் காவியம் தோணுதே
ஓராயிரம் எண்ணங்கள் உள்ளமும் காணுதே

பூவின் உருவில் அலரும் இதழ்கள்
பூரிக்கச் செய்யுதே மென்மைப் படல்கள்

வண்ணத்துப் பூச்சியாய் மூக்கும் அங்கே
கண்ணுக்குக் கீழே கவர்ச்சியின் பாங்கே

இதழில் தேனைக் குடிக்கும் நோக்கில்
இதமாய் விதமாய் சிறகடிக்கும் வாக்கில்

விழியோ மயங்கி இமையை மூடி
விரிந்தே இரு இலைகள் நாடி

கண்ணாய் உருவம் தந்தே இங்கு
காரிகை வதனம் ஆனதே அழகு



கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான்குடி(இலங்கை)

# கொன்றை வேந்தன்

துணைப் பொருண்மை:
ஏவா மக்கள் மூவா மருந்து

(பொருள்: ஆணையிடாமல் குறிப்பறிந்து செய்யும் மக்கள் இருந்தால் அவர்கள், ஒருவனுக்கு அழிவில்லா வாழ்வைத் தரும் மருந்தாகுவர்.)

பா வகை: வெண் கலிப்பா

குறிப்பறிந்தே தன்மக்கள் கூடுகையில் இன்பமதும்
சிறகடித்தே உள்நெஞ்சில் தித்திக்கும் தேனாக
மொழியொன்று சொல்லாமல் முன்நின்றே செய்கையிலே
வழிந்தோடும் பேரின்பம் வாழ்க்கையதை செப்பனிடும்
அகம்நிறைந்தே பூத்திடுமே அல்லியென பொன்னுயிரும்
மகிழ்வினிலே தோய்வதனால் மண்டியிடா நம்நலனே
மருத்துவரும் தேவையில்லை மண்ணிருக்கும் காலத்தே
மருந்துகளும் தேவையில்லை மாட்சிதரும் பிள்ளைகளால்
கருவறையும் மெச்சிடுமே கண்ணான பிள்ளைக்கே
பெருமைகொண்டு கண்ணீரும் பெய்திடுமே இன்பத்தால்
நினைக்கும்முன் செல்வங்கள் நேர்த்தியாக செய்வதனால்
அனைத்துலக இன்பத்தை அள்ளிடுதே ஆழ்மனமும்
அளவில்லா பேருவகை அப்பிடுமே என்றென்றும்
வளமுள்ள நல்வாழ்வும் வாழ்த்திடுமே வந்துநின்று
மகவுகளே இவ்வாழ்வில் மாண்பான பேறுகளாம்
தகவாக பிள்ளைகளும் தாங்கிடவே ஏதுகுறை
உயிர்மூச்சும் வற்றாமல் ஓடிடுமே மென்மேலும்
துயர்தனையும் தொட்டிடாமல் தொடர்ந்து.



கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# ஆகாய மலர்

காதலிலே ;

ஆ"காயம்"கூடாதென்று
ரோஜா மலரை வெறுத்தவனும்,

ஆகாத வார்த்தையாலே மலரானவளையும்
ஆகாது வேரறுத்தானே!
ஆகாயமலராய் உயர்ந்த காதலும்,
அந்தி நேர சருகாய் காய்ந்தே!
அடி மண்ணுக்குள் போனதே!
அவனுடைய ஒற்றைசொல்லாலே!



ஆ....அரசியலிலே;

அடர் இருட்டு ஆகாயமும்,
அழகான மலர்விளக்குகளால்
அடுக்களை வரை அழகாக ஜொலிக்கிறது,
அநியாயக்காரர்களின் அளவில்லா
அட்டகாச விழாவிலே!

அப்பா;
ஆகாயத்தையும் அள்ளித்தந்திடுவானே,
அன்பான தந்தையுமே அழகு மலர் மகளுக்காக!

இயற்கை:

அதிகாலை நேரத்திலே
ஆகாயமும் மலர்ந்திடுதே
அடர்வெண்பனி பூக்களாய்.

கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# வேம்பயர் காதல்

மேகங்களின் வெண்மையை விட
அதீத வெண்மை நிறம் கொண்டவன்.

இயல்பில் நிறம் மாறாத மனிதனின்
கருவிழியை விட காலத்தின் மாற்றத்தில்
தானாக நிறம் மாறும் கருவிழியை இயல்பில் கொண்டவன்.

அமைதியாய் இருந்தே தன் காரியங்கள்
நிறைவேற்றிக் கொள்ளும் காரியக்காரன் அவன்.

எதிலும் நிதானம் கொள்பவன் கோவம் கொள்வதும்
அவனவளிடம் மட்டுமே.

அவனின் அதீத பேச்சுக்கும் காரணம் அவளே அவள் மட்டுமே.
அவளுக்கு ஒன்றென்றால் அகிலத்தையே அழிக்க துணிபவன்.

அவனவளை பாதுகாக்க பிரபஞ்சத்தின் எல்லை வரைக்கும் செல்பவன்.

அவனுக்கும் அவளுக்கும் இடைவெளி நூற்றுக்கும் மேலான வருடங்கள் இருக்க
அவர்களின் நேசத்தின் அளவோ அந்த வருடத்திற்கும் மேலானது.

உணர்வுகள் அற்ற உயிராய் அவனும் அவனுக்காக உணர்வுகள் இழந்த அவளும்
இணைந்த ஆழமான காதல் அவர்களது.



மனித இனத்திற்கு எதிரான அவனோடு சிறு பெண்
அவளை சேர்த்ததோ காதல் எனும் மாயம்.

முதன்முதலாய் நான் விழி அகற்றாமல் ரசித்த
என் அழகிய வேம்பயர் அவன்.

ட்வைலைட் எனும் கதையில்
என்னை ஈர்த்த கதாநாயகன்
அவன் எட்வர்ட் கல்லேன்.

கவிஞர் ரதி ஜெயராஜ்,வல்லம்

# நீல நிறம்

ஆழக் கடல் கண்ணாடிக்குள் தொலைத்த முகத்தைத்
தேடுவது போன்ற பாவங்கள் காட்டிடும்
வெண்மேகங்கள் சுமந்திட்ட நீல வண்ண வானமது!

சிறு பொழுதேனும் தினந்தினம்
அதையும் உற்று நோக்கினால்
தீர்ந்திடுமே மொத்த மன
அழுத்தங்களும்;

இதயத்திற்குப் பலம் கொடுத்து
இரத்த ஓட்டத்தையும் சீராக்கிடும்
ஆனந்த அற்புதம் அது!

காணும் போதே கண்களைக்
கவர்ந்து நெஞ்சமும்
நிறைத்திட்ட ஒப்பற்ற
வர்ணம் அல்லவா அது!

எங்குங்கும் சேர்த்து
எப்போதும் ரசித்து
மகிழ்வோம் குளிர்
நீல நிறத்தினை!

கவிஞர் மலர் அபி,சிதம்பரம்

# புத்தகமே புனிதமாக்கும்

வேண்டாம் வெளிப்பகட்டு கல்விப்பால் புகட்டு
அறியாமை நீக்கியே அறிவொளி ஏற்றிடும்
இளைஞனே புகுவாய் புத்தகச் சந்தை
விளைவாய் பெறுவாய் வித்தகச் சிந்தை
அறிவின் ஊற்றால் உயரத்தில் ஏற்றும்
செறிந்த ஞானத்தைப் பாரே போற்றும்
புத்தகமே நம்மைப் புனிதம் ஆக்கும்
பேராயுதமாய் என்றும் நம்மைக் காக்கும்



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# பசுமை

இடையினும் வளையென
வளைந்திருக்கும் புருவங்களில்
அத்தனை அடர்த்தி "எத்தனை
அழகடி மெத்தென்ற அதனை
நேர்த்தி செய்வதேனடி!" என்றவனை

"நேற்று ஏன் சலூனுக்குச்
சென்றாய்?" என்றாய்!

கேள்வியால் தடுமாறியதை
வேள்வியால் வெல்ல
மெல்ல இடையிடம் சென்று
அங்கொரு பெரும் கேள்வியைக்
கேட்காமலே புதைத்துக்கொள்கிறேன்;

வேள்வி முடிந்த கதகதப்பில்
கூந்தலுக்குள் முகம்புதைத்துக்
கேள்விகளை மேகமாக்கிச்
செவி மடலினில் மழைக்கிறேன்;



பியூட்டி பார்லரிலும்
குளியலறையிலும் நீ
செய்துகொள்ளும் நேர்த்திகளில்
எட்டுவிழ்சாலையிட்டு நான்
அதிவேகத்தில் பயணிக்க ஆசையா?

கானகமழிப்பது எத்தனைப்
பெருங்குற்றமோ
அதனினும் பெருங்குற்றம் நீயுன்
ரோமங்களை அறுவடை செய்வது;

உன் ரோமங்கள் மீதான என்
காதலை மொழிந்துவிட்டேன்;
காதல் நிறையாமல்
காமம் எப்படி வ(க)ழியும் கண்மணி?

கவிஞர் தயானேஸ்வரன்,வில்லிவாக்கம்,சென்னை - 49

# அவளின் கேளன் சரித்திரம்

சொல்ல மறந்த கதை அவளின் கேளன்
சரித்திரம் சொல்ல கூடிய கதை எண்ணற்ற
வார்த்தைகளை கோர்த்து பூமாலையாய்

தோள்கள் உரசி தொடங்கிய நட்பல்ல!
கைகள் தீண்டி நடந்த நட்பல்ல! புன்னகை
சிந்தி பெற்ற நட்புமல்ல! இதுதான் நட்பேன
உணரும் முன்னே தோழமையும் உரிமையும்
எடுத்து கொள்ளப்பட்டது



போடாத சண்டைகளுமில்லை திட்டிடாத
வார்த்தைகளுமில்லை ஆனபோதும் விட்டு
செல்லவும் மனமும் வரவில்லை அவளிற்க்கு

மனங்கோண நடந்த நிமிடங்கள் ஏராளம்
அவளை மறந்த கணங்கள் ஆயிரம்
வேண்டுமென்றே அழவைத்த காலங்கள்
பல ஆயினும் என்னை கட(மற)ந்து செல்லாத
அவளின் உண்மையான அன்பு

இன்று வரை நடக்கும் பாசப்போராட்டம்
நான் என்ற முதன்மை போராட்டம்
வெளிப்படுத்(தாமலும்)தியும் சிறு
பொய்கோபங்களோடு

எதற்கு இணைந்தோம் எனெ தெரியவில்லை
ஆனால் எதற்கு புரியகூடாத உறவு அவளது உறவு.

இனிய பிறந்தநாள் வாழ்த்துகள் பிடீங் பாட்டில்

கவிஞர் ஜெரிஸ் நிவோஷா,மணக்குடி

# குடைக்குள் மழை

மேகம் குடைப் பிடித்து
மெல்ல மெல்ல நடந்து
காற்றோடு உரசி உதறும்
துகள்களாக துளிகளின்
ஊர்வலம்

ஒற்றை குடைக்குள்
நெருக்கத்தின் தீண்டல்
குவளை மலரென குழைந்த
விழிகள் படபடப்பில்

உள்ளங்களின் ஓசையும்
ஒற்றை பார்வையிலே
ஒற்றலென புன்னகையில்

மௌனமும் வாகாய்
குடைப்பிடித்து
பாதத் தடம் பதித்து
நெருங்கிய நெஞ்சத்தின்
நெகிழ்வும்
நேற்றைய கோபமும் கானலாய்
கரைந்தே

குடைக்குள் மழையும்
கும்மாளமான மனம் துள்ளலாய்
துள்ளின

தீண்டிய குளுமையும்
சிறுதுளியின் தொடுகையில்
இதே நெருக்கம் இதே நெருக்கம்
தொடர்ந்திடுமோ



சுகந்தத்தின் மணம் நிறைந்த
மண்ணின் மணமும்
மனம் விட்டு பேசியதில்

நனைந்த இதயவாசலில்
மெல்ல திறந்த காதல் கதவுகள்
மூடாத விழிகள் மெல்ல கிறங்கின

ஒற்றை குடை ரகசியம்
துளிகளறிந்து துள்ளாட்டம்
தாளாத நெஞ்சங்கள் தாளம் தப்பின.

எனது விழி வழியோரம்
உனது விழி கலந்தோடும்
வருவாயா வருவாயா
ஒற்றை குடைக்குள் மழை
வெல்ல துடிக்கும் காதல் மழை

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி,நாகை மாவட்டம்

# நீந்தும் கதிரொளி

வைகறைத் தொட்டு
வெம்மை போக
நீந்தும் கதிரொளி
கரையேறி
களைப்பாறுவாயா

கால் நனைக்கவிடாது
என் களைப்புகண்டு
களிப்புறுவாயா



நினைக்கும் போதெல்லாம்
நிதானமற்ற ஓடம்போல
நீரில் தத்தளிக்கிறாய்

ஓய்வற்ற மனமோ
உன்னுடையது

தன்போக்கில்
சிந்திக்கிறது

தாயின்
சுட்டுவிரல் சூட்டில்
சுகங்காணும்
சிறு பிள்ளையாகி
உனை கலைத்து
கால் நனைப்பேன்

பின்
இடுப்போரக்
குடத்தில்
அடைப்பேன்
உன்னை!

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# எதியோப்பியாவில் தமிழ்

ஆற்றினது பெருவெள்ளம் மடுவதனை மேடாக்கும்!
மேடழிந்து மடுவாகும் என்றறிவோம்! பேராழி
தன்கரையைக் கடந்திடுமேல் விரிநிலமும் ஆழ்ந்துவிடும்!
கடற்பரப்பின் அடியமிழ்ந்த நிலப்பரப்பு கண்படுமே!
பண்டொருகால் இமயஞ்சூழ் நிலப்பரப்பு நீர்சூழ்ந்து
நின்றதுவாம்! தெற்கமைந்த இந்துமாக்கடல் இந்தியாவும்
தீவகமாம் ஈழமதும் தொடர்ச்சியான லெமூரியாப்பேர்
கண்டமொடு ஆப்ரிக்காவும் ஒன்றிணைந்த பெருநிலந்தான்
இருந்ததுவாம்! தலைச்சங்கம் இடைகடையெனத் தமிழ்வளர்த்த
சேதியுண்டு! அப்பரப்பில் அந்நாளில் நற்றமிழ்தான்
நீள்பரப்பு கண்டதுவாம்! புவியாய்வும் மொழியாய்வும்
ஆற்றலர்கள் நற்றுணிவு ஆனதுவே! எத்தியோப்பிய
மக்களிடை பேசுமொழி ஆய்ந்திட்டால் பற்பலவாம்
தமிழ்ச்சொற்கள் இன்றுமுண்டே! அப்பாவும் இன்னையும்
ஆச்என்பதும் அம்மாச்எனும் சொல்வழக்கும் மிதப்பென்பதும்
தெப்பமதும் ஆடவர்தம் பெயராக நாகனொடு
தேவனதும் சிங்கனென சித்தன்பேர் மாடநாடன்
உதயனொடு கண்ணன்பேர் காமனொடு இடையனுமே
வழக்கிலுண்டே! ஆதனெனல் பொதுப்பெயரே! வரதட்சணை
மகன்வீட்டார் மகள்வீட்டார் பெற்றிடவே தரல்வேண்டும்!
தேசீய ஊணதனை பாதுகாப்பாய் வைத்திடற்கு
கூடையும் பாற்பசுவும் மனைவிக்குக் கணவன்மார்
வழங்கிடவே வேண்டுவதாம்! மணந்தபின்னே மகப்பேறு
பெண்ணவளின் தாய்வீட்டில்! பசுவதுவும் கோமியமும்
சாணமதும் புனிதமாய்க் கொள்கின்றார்! தாய்மாமன்
முதன்மையது ஆங்குமுண்டு! கூட்டாக வாழ்வதுவே
அவர்விருப்பு! ஊட்டிதோடர் மாதர்போல் ஆங்குள்ள
பெண்மக்கள் ஜடையிட்டு முடிபின்னுவர்! பேச்சுமொழி
கேட்டிட்டால் வேர்ச்சொற்கள் தமிழாதல் உணராவோமே!
நந்தமிழர் பண்பாடு புலப்படுமே! மகிழ்வன்றோ?




கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# உயர்வாய் உள்ளுவாய்

அனைத்து உயிர்களின்
சுவாசக் காற்றினால்
பூமிப்பந்து உருளுவதாய்
உயர்வாய் உள்ளு.
முயலா எண்ணங்களை
புறந்தள்ளு.

பறக்கும் நட்சத்திரங்களாய் மின்மினிகள்
உலகிற்கு ஒளி தரும்போது
ஆறறிவை பயன்படுத்தி
ஆக்க செயலில் இறங்கு.

இயல்பாய் செயலாற்றும்
நிலா சூரியனை
நினைவில் கொள்.

ஒவ்வொரு நாளும்
உன்னை புதுப்பித்துக்கொள்

வாழப் பிறந்த மனிதனுக்கு
கிடைத்த வாய்ப்பாய்
மெய்யறிவை பயன்படுத்து

புத்துயிர் ஊட்ட
உன்னை நீயே தட்டிக் கொடு.
இனிதாய் வாழ்வை
புலர விடு.



கவிஞர் ஞா போனிபாஸ்,கடலூர்

# விழியோர ஈரம்



உன் விழியோர ஈரம்
என் மனதை சுட்டு விட்டதடி!
சிவந்த உன் கண்கள்
எனக்கு செந்தாமரைப்பூ போல
தெரிகிறதே என் கண்ணம்மா!
ஐம் பொன் சிலை போல
உன் மேனி அழகை என்
கண்கள் கொள்ளை கொண்டதால்
என் கண்களும் சிவப்பேறி போனதோ!
எந்நேரமும் கவிதையை வாசிக்கும்
உன் அழகிய கண்களுக்குள் நான்
இருப்பதால் தானோ என்னவோ
என் மனவேதனை உன் விழியை
சுட்டு விட்டதால் தான் இந்த வேதனையோ ?
காத்திருப்பேனடி என் கண்ணம்மா
காத்திருப்பேனடி என் காலம் உள்ளளவும்
என் கண்ணுக்குள் வைத்து உன்னை
காப்பேனடி!

கவிஞர் கிருஷ்ணவேணி. ஆ,ஊத்தங்கரை (கிருஷ்ணகிரி மாவட்டம்)

# தகவல் தொழில்நுட்பம்

தகவல்களை பரிமாற்றும்
தனித்துவ நுட்பம்.
இகழாது உயர்ந்திட
ஈட்டிய நுணுக்கம்.



உருவாகிய நிலையில்
உன்னதம் கிடைத்தது.
கருவிலே திறமையும்
கண்டிட சிறந்தது.

நன்மைக்கு உருவானது
நாசமாய் மாறிட.
வன்மைக்கு கருப்பொருளாய்
வந்து நிற்கிறது.

தேவைக்கு பயன்படுத்தி
தேர்ந்திட துணிவோம்.
பாவையும் நடமாட
பாதுகாப்போம் தொழில்நுட்பத்தை.

கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# கடவுள்

நலமற்று
இருப்பதும்
நலமே



முகமறியா
முகங்கள்
அனைத்திலும்
பரம்பொருளின்
சாயல்

யாரொருவர்
வீட்டிலோ
எல்லோருடைய
பசியும் வெந்து விடுகிறது

அலைபேசியில்
எண்ணிடத் தெரியாத
அப்பாவுக்கு
உதவிடும் கைகள்
முத்தம் பெறுவதற்கே
பிறந்தவைகள்

அவர்களின்
அன்பு மழை பேச்சு
தூரத்தில் இருப்போரின்
உயிர் நனைத்து விடுகிறது

சுகவீனமுற்றவர்களுடன்
அரசு மருத்துவமனைகளில்
உடன் இருப்போர்
கடவுள் என்பதை
காலம் சொல்லிக்
கொண்டே இருக்கிறது!

கவிஞர் மோகன்ராஜ்,சென்னை

# வாழ்க்கை நகர்கிறது

ஓலைக் குடிசை முன்றிலில்
ஒட்டுத்துணியில்
இளஞ்சிட்டுக்கள்!



மெலிந்த உடலும்
உப்பிய வயிறுமாய்
விலா எலும்புகளின்
வரிக்கோலங்கள்!

வியர்வைத்துளிகளைத்
துடைக்க நேரமின்றி
சேற்றுக்குளியலில்
நாட்டின் முதுகெலும்புகள்!

சாலையோரங்களில்
கீரை விற்கும் பாட்டி
சில்லறைக் காசென்னும்
சந்தோஷ சத்தங்கள்!

சொகுசு வாகனங்களில்
சத்தமின்றி வந்து
வீதியோரத்தில்
குப்பை வீசும் சுயநலமிகள்!

குப்பை மேட்டில்
காக்கைக் கூட்டங்களில்
இலவச சுத்திகரிப்புகள்
கூடவே தெருநாய்களின்
தேடல் கொண்டாட்டங்கள்!

வயிற்றில் ஒன்று
இடுப்பில் ஒன்று
கையில் ஒன்றென
கடைத்தெருவுக்குச் செல்லும்
பெண்ணின் அங்கலாய்ப்புக்கள்.

அன்றாடம் வீதியில்
வரும் இளம்பெண்களை
சீண்டும் போக்கிரிகள்.
விலாசம் இல்லா அனாதைகள்!

வாழ்க்கை நகர்கிறது!

கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# கதை கேட்டீரா?

ஒரு ஊர்ல ஒரு அம்மா அப்பாவாம்
அவர்களுக்கு ஒரு செல்லக் குழந்தையாம்

கேட்டதெல்லாம் வாங்கித் தருவாராம்
குழந்தை அழுதா கண்ணீர் இவர் சிந்துவாரம்

எனக் கதைகள் பல கேட்டு
மழலைகள் கண்ணயர்ந்த காலம் மாறியே

தொலைக்காட்சியில் மூத்தோருக்கு சீரியலும்
சுட்டிக் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளுடனே காலமும் கழியுதிங்கே



அன்பாய் ஆதரவுடனே மூத்தோர் பாராட்டி சீராட்டி
துயரம் அறிந்திடாத காலமும் மறந்ததுவே

மூத்தோர்களுக்கு முதியோர் இல்லமென
புது இடமும்தான் உருவாச்சே

ஆச்சி ஆசையாய் செய்து தந்த பலகாரமும் உணவுகளும்
சுவையாய் நாக்கினில் ஊறும் நினைவினிலே இருக்க

எட்டும் தூரத்திலிருந்தும் எட்டாக் கனியாய் மாறிப் போன
மூத்தோர்களின் கதைதனைக் கேட்டீரா?

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# எனக்கான தேடல்

சில்லென்ற தென்றலாய்
வேட்கையென சேர
சிலிர்த்த விழிகளும்
அலை மோதுதடா காற்றோடு.

கருவிலே விதைத்த
காதலை கண் முன் தோன்றி
நீ கடக்கும் நொடியெலாம்
கூற முனைகிறேன்.

சற்று செவி சாயடா.
சலனமற்ற மழலை வாசம்
நாசி துழைக்க
பிஞ்சு விரல்களால்

வதனத்திலே வரைந்த கோலமாய்
சொக்கி நிற்கிறேன்
உன் குறுநகையில்.
காற்றோடு கதைக்கும் இலைப்போல.

எண்ணற்ற விண்மீனிடையே
நானும் ஒன்றாய் மின்ன
அத்துனையிலும் உன் விழி
எனை தேட.



நாணம் கொண்டு வெட்கி வெட்கி
மிளிர்கிறேன்; சற்று உற்று பாரடா.
சாந்தத்திலே சாரீரமாய்
உனை உணர்ந்த எனை போல.

எனையும் நீ உணர்ந்திட
முயற்சிக்கொள் கோன் ஆனவனே.
கணையால் இருதயம் துழைத்து
நுழைந்த உன்னால்.

எனை நெருங்க நீயாய் வாராயோ
வசந்த வாசம் தாராயோ
தாரகை மணம் சுவாசிக்க
மனம் தளர்ந்து தேட முனைந்திடுவாயாக.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# ஹைக்கூ

பிறந்த வீட்டைத் துறந்து
பெருமையோடு வெளியேறி செல்கிறது
மலைச்சரிவுகளில் ஆற்றுநீர்.



கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# தாமரைப்பூ மனசுக்குள்ள

தாமரைப்பூ மனசுக்குள்ள
தாகம்தீர்க்க வந்தவனே

தாமரப்பூ மனசுக்குள்ள
தாகம்தீர்க்க வந்தவனே
பூமரமா நானிருக்க
தேனருந்தும் வண்டாநீயெனக்கு

தேகத்துல தூண்டுற
தேவதையென ரசிக்கிற
மோகத்துல மாமா
மேகமா பறக்குறேனே

ஒன்னநெனச்சி உருகுறேன்
ஓயாதுபாக்க தவிக்கிறேன்
கொல்லாத மச்சானே
தெனமும் என்ன

கொத்தித் தின்னும்
பழமாத்தான் நானு
வத்திவச்சிப் போறியே
வாடுதையா ஒடம்பெல்லாம்

சோறுதண்ணி சாப்புடலை
சோதனையும் தீரவில்லை
மாத்திப்புடு மாராப்பா
மாமா ஒன்ன போட்டுக்கிறேன்



கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# என்ன பார்வை உந்தன் பார்வை?

தன்னுள் காதல் நோயை விளைத்தது
பெண்ணவளின் பார்வை! பகைவரிடத்தும் காட்டும்
நட்பும், அன்பும்,இரந்தவர்க்கு ஈயும்
கொடையும், அறவழி நிற்கும் பண்பும்,
பெண்களிடம் இரவாது பெற்ற நாணமும்
தன்னை விட்டு நீங்கியதன் காரணம்
பெண்ணவளின் கண்ணின் நோய்செய்த ஒருநோக்கு!
துவண்டிருந்த தலைவனிடம் பாங்கன் வினவுகையில்
அவனுக்குத் தலைவன் பதிலிறுக்கும் பாடலிது!
நற்றிணைப் புலவர் நமக்களித்த பாணியிது!
களவு நிலையில் தலைவனுக்குத் துயரை
அளித்தது தலைவியின் திறன்மிகு நோக்கு!
வள்ளுவரும் இருநோக்கு இவளுண்கண் என்றுரைத்தார்!
ஒருநோக்கு தலைவனின் திறனழித்து நோயளிக்கும்!
வருத்தமுறும் தலைவனுக்கு மையுண்ட கண்ணின்
மறுநோக்கு அந்நோய்க்கு மருந்தாகும் அன்புநோக்கு!
கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரர்க்கு மாமலையும் கடுகாமே!
களவு நிலையில் தலைவனைத் தன்பால்
ஈர்த்துத் திறனழித்த ஆற்றல்மிகு கண்கள்
கற்பு நிலையில் அவளுக்குத் துயர்தருமே!
பொருள்தேடிப் பிரிந்த தலைவன் திரும்பும்வரை
உறக்கமின்றித் தவித்திருக்கும்! உள்ளத்தில் துயர்மிகும்!
வருவதை அறியாமல் இடர்செய்த பார்வை
பிரிவைப் பொறுத்திட இயலாமல் தவித்திருக்கும்!
இருவரின் பார்வையிலும் இருநோக்கைக் கண்டோமே!
விரைந்து வந்தான் தலைவனவன் வீடுநோக்கி!
பிரிந்தவர் மீண்டும் சேர்ந்திடும் போது?
பார்வையாலே நூறுபேச்சு! வார்த்தையங்கு மூர்ச்சையாச்சு!
பாடல் வரிகள் சூழ்நிலைக்குப் பொருத்தமாச்சு!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# திருமூலர் நாயனார்

எட்டுபேர நந்தியம் பெருமானிடம் கல்வி கற்க கயிலை சென்றார்கள்
எட்டு பேர்: சனகர், சனந்தரர், சனநாதர், சரத்குமாரர், சிவயோக முனிவர்
எட்டிய பதஞ்சலி, வியாகரபாதர், சுந்தரர் என்ற திருமூலர் ஆவார்கள்
எட்டுத் திக்கும் சென்றவர்கள் கூத்தனை வழிபட தில்லை வந்தாரகள்
தட்சிணாமூர்த்தியிடம் முதல் நால்வர் மௌனமாகத் தங்கிவிட்டாரகள்
தஞ்சமடைந்தார்கள் நடராஜரிடம் சிவயோக முனிவர், பதஞ்சலி
மிஞ்சியவர்களில் வியாக்ரபாதர் ஆகாச பாதையில் சென்றுவிட்டார்
எஞ்சிய சுந்தரநாதர் திருவாடுதுறை வந்து சிவனை வணங்கினார்

ஆடுதுறை பெருமான் அழகில் மயங்கினார்,"தங்கலாமா? கூடாது
வீடுபேறு அடைய கயிலையே சிறந்தது'', புறப்பட்டார் இமயம்
காடுவழி கண்டார் இறந்து கிடக்கும் இடையன், பசுக்களின் ஒலம்
கூடுவிட்டு கூடு பாய தன் உயிர் இடையன் உடலுக்குள் புகுந்தது

இடையனாகிய மூலன் கண்விழித்து தன் பசுக்களைக் கண்டான்
மடை திறந்ததுபோல் பசுக்கூட்டம் மூலனுடன் வீடு திரும்பின
விடைபெற்று அவை தம் தம் வீடுகளுக்குள் சென்று அடைந்தன
கடைசியாக தன் பசுவுடன் மூலன் தன் வீடு வந்து சேர்ந்தான்

வீடுவந்த கணவனை வரவேற்றாள், "வாருங்கள் உணவருந்தலாம்"
திடுக்கிட்ட சிவயோகியின் ஆன்மா, "நான் உங்கள் கணவரல்ல"
தடுமாறி நின்றவளிடம் ,"உடல் உன் கணவன் ஆன்மா என்னுடையது
விடுகதையை விளக்கிக் கூற கூட்டி விட்டாள் ஊர் மக்களை

"இவர் என் கணவர் , என்னை வெறுத்து எதோ கதை சொல்கிறார்
இவள் கூறுவது உண்மையா மனைவியோடு வாழ வகை செய்வாயாக
அவர் எடுத்துரைத்தார் நடந்த உண்மையை, ஆவின் துயரம் கண்டேன்
சவமா கிடந்த மூலனை உயிர்ப்பித்தேன், நான் வருகிறேன்".




"பற்று அற்ற இவர் உன் கணவன் இல்லை, சிவனருள் பெற்றவர்
சற்றும் எதிர்பாராத நிகழ்வு இது, இல்லற வாழ்க்கைக்கு உதவார்
மற்றும் புரிந்துகொள் கணவன் உடல் மட்டுமே உனக்கு சொந்தம்
தேற்றிக் கொள் உன் மனதை, இறை வழி செல்ல அவரை அனுமதி"

ஊர் பெரியவர்கள் சொல் கேட்டு மனம் நொந்து வீடு சென்றாள்
நேர்மையான சிவயோகி தன் உடல் கிடக்கும் இடம் வந்தார்
பார் போற்றும் அடியாரின் உடல் விட்ட இடத்தில் இல்லை
தீர்மானமாக உணரந்துகொண்டார் இது சிவனின் செயலாகும்

அசரீரி ஒலித்தது, "திருமூலரே ! உன் பிறவிக் கடன்ஒன்று உள்ளது ,
சைவ சமயத்தின் சிவ ஆகமங்களை எளிய தமிழில் எழுதுவாயாக"
சிவ மந்திரமாக மூவாயிரம் பாடல்கள் எளிய தமிழில் எழுதினார்
சிவமே அன்பு; அன்பே சிவம் உலகில் ஒலிக்கிறது திருமந்திரமாக

திரு மந்திரம் முதல் பாடல்
ஒன்றவன் றானே இரண்டவன் இன்னருள்.
நின்றனன் மூன்றினுள் நான் குணர்ந் தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பரச்
சென்றனன் தானஇருந் தான் உணர்ந் தெட்டே."

**கவிஞர் ந.திருக்காமு**

# அப்பா

முடிசூடா மன்னர்
வீட்டின் கதாநாயகர்
சுமைதாங்கி மரம்
மனதை அடக்கும் வீரர்
பயமுறுத்திடும் காளை
தனக்காய் வாழத்தெரியாதவர்
குடும்பத்தின் மெய்காப்பாளர்
முரட்டு பாசக்காரர்
முறுக்கிய மீசைக்காரர்
இருட்டிலும் காவல்காரர்
இளகிய மனதுக்காரர்
ஆசைகளை நிறைவேற்றுவார்
ஆசைப்படத் தெரியாதவர்
உயிராய் காப்பவர்
உலகின் உன்னதர்
உறவினில் சிறந்தவர்
உயிர்பிரியும் வரை உழைப்பவர்
உயிரான உயிரே
மறந்திடாதே மனம்
நினைப்பேனே தினம்
ஒப்பனையில்லா அழகே
ஒப்பில்லா உறவே
இறந்திட்ட போதும்
மறந்திட முடியலே.



கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# புரட்சிக்கவி பாரதிதாசன்

(கட்டுரை)

## பிறப்பு



தென்னிந்தியாவில் புதுவையில் 29 .04. 1891 கனகசபை முதலியார் மற்றும் இலக்குமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். அவரது தந்தை, அவ்வூரில் பெரிய வணிகராக இருந்தார். பாரதிதாசன் அவர்களின் இயற்பெயர் சுப்புரத்தினம். அவரது தந்தையின் பெயரின் முதல் பாதியை, தன்னுடைய பெயரில் இணைத்து 'கனகசுப்புரத்தினம்' என்று அழைக்கப்பட்டார்.

## கல்வி

பாரதிதாசன் அவர்கள், தனது இளம் வயதிலிருந்தே தமிழ் மொழி மீது அதீத பற்றுடையவராகத் திகழ்ந்தார். இருப்பினும், புதுவையில் பிரெஞ்சுகாரர்களின் ஆதிக்கம் இருந்ததால், அவர் ஒரு பிரெஞ்சு பள்ளியிலே சேர்ந்தார். அவர் தனது தொடக்கக் கல்வியை, ஆசிரியர் திருப்புளிசாமி அய்யாவிடம் கற்றார். சிறு வயதிலேயே சுவைமிக்க அழகானப் பாடல்களை, எழுதும் திறனும் பெற்றிருந்தார். பள்ளிப்படிப்பை நன்கு கற்றுத் தேர்ந்த அவர், தனது பதினாறாவது வயதில், புதுவையில் உள்ள கல்வே கல்லூரியில் சேர்ந்து, தமிழ் மொழியின் மீது அவர் வைத்திருந்த பற்றினையும், அவரது தமிழ்ப் புலமையை விரிவுப்படுத்தினார். தமிழறிவு நிறைந்தவராகவும், அவரது விடா முயற்சியாலும், தேர்வில் முழு கவனம் செலுத்தியதால், மூன்றாண்டுகள் பயிலக்கூடிய இளங்கலைப் பட்டத்தை, இரண்டு ஆண்டுகளிலேயே முடித்து கல்லூரியிலேயே முதலாவதாகத் தேர்ச்சிப் பெற்றார். மிகச்சிறிய வயதிலேயே இத்தகைய தமிழ் புலமை அவரிடம் இருந்ததால், கல்லூரிப் படிப்பு முடிந்தவுடனே அவர், 1919ல் காரைக்காலைச் சேர்ந்த அரசினர் கல்லூரித் தமிழாசிரியாராகப் பதவியேற்றார்.

# புரட்சிக்கவி பாரதிதாசன்

(கட்டுரை)

## பாரதிதாசன்திருமணம்



பாரதிதாசன் அவர்கள், தமிழாசிரியாராகப் பதவியேற்ற அடுத்த ஆண்டிலே அதாவது 1920 ஆம் ஆண்டில் பழநி அம்மையார் என்பவரை திருமணம் செய்து கொண்டார். அவர்கள் இருவருக்கும் நவம்பர் மாதம் 3 ஆம் தேதி, 1928 ஆம் ஆண்டில் மன்னர்மன்னன் என்ற மகன் பிறந்தான். அதன் பிறகு, சரஸ்வதி, வசந்தா மற்றும் ரமணி என்ற மகள்களும் பிறந்தனர்.

## பாரதியார் மீது பற்று

தமிழ்மொழி மீது பற்றுக் கொண்டவராக இருந்த பாரதிதாசன் அவர்கள், அவரது மானசீக குருவாக சுப்ரமணிய பாரதியாரைக் கருதினார். அவரது பாடலைத் தனது நண்பனின் திருமண நிகழ்வின் போது பாடிய அவர், பாரதியாரை நேரில் சந்திக்கவும் செய்தார். பாரதியிடமிருந்து பாராட்டுக்கள் பெற்றதோடு மட்டுமல்லாமல், அவரது நட்பும் கிடைத்தது அவருக்கு. அன்று முதல், அவர் தனது இயற்பெயரான கனகசுப்புரத்தினம் என்பதை 'பாரதிதாசன்' என்று மாற்றிக் கொண்டார்.

## தொழில்

பாரதியாரிடம் நட்பு கொண்ட அன்று முதல், பாரதிதாசன் என்ற பெயரிலே அவர் தனது படைப்புகளை வெளியிட்டார். அச்சமயத்தில், சுதந்திரப் போராட்ட சூழல் நிலவியதாலும், அவர் திராவிட இயக்கத்தின் தீவிர தொண்டன் என்பதாலும், தந்தை பெரியார் மற்றும் பல அரசியல் தலைவர்களுடன் இணைந்து பல போராட்டங்களில் ஈடுபட்டு பலமுறை சிறைக்குச் சென்றார்.

# புரட்சிக்கவி பாரதிதாசன்
(கட்டுரை)

## தொழில்

அவரது இலக்கிய நடையைக் கண்டு வியந்த அன்றைய திரைத் தயாரிப்பாளர்களும், இயக்குனர்களும் அவருக்கு வாய்ப்புகள் வழங்கியதால், அவர் திரைப்படங்களுக்கும் கதை-வசனம் எழுதியுள்ளார். பெருந்தலைவர்களான அண்ணாதுரை, மு. கருணாநிதி, மற்றும் எம்.ஜி. ராமச்சந்திரன் போன்றோர் அவருடைய படைப்புகளுக்காக அவரை ஊக்குவித்ததாலும், அவர் 1954ஆம் ஆண்டில் புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஐந்து ஆண்டுகள் செம்மையாக செயல்புரிந்த அவர், 1960ல் நடந்த சட்டமன்ற தேர்தலில் தோல்வியைத் தழுவினார்.

## படைப்புகள்

எண்ணற்ற படைப்புகளை அவர் தமிழ்மொழிக்கு வழங்கி இருந்தாலும், சாதி மறுப்பு, கடவுள் எதிர்ப்பு போன்ற மூடநம்பிக்கைகளை மக்களின் மனதிலிருந்து அழிக்கும் விதமாகப் பல்வேறு படைப்புகளை வெளியிட்டார். அவரது மிகச்சிறந்த படைப்புகளில் சில:





'பாண்டியன் பரிசு', 'எதிர்பாராத முத்தம்', 'குறிஞ்சித்திட்டு', 'குடும்ப விளக்கு', 'இருண்ட வீடு', 'அழகின் சிரிப்பு', 'தமிழ் இயக்கம்', 'இசையமுது', 'குயில்', 'தமிழச்சியின் கத்தி', 'பாண்டியன் பரிசு', 'பாரதிதாசன் ஆத்திசூடி', 'பெண்கள் விடுதலை', 'பிசிராந்தையார்', 'மயிலம் ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது', 'முல்லைக் காடு', 'கலை மன்றம்', 'விடுதலை வேட்கை', மற்றும் பல.

# புரட்சிக்கவி பாரதிதாசன்
(கட்டுரை)

## விருதுகள்

பாரதிதாசன் அவர்களுக்கு பெரியார், "புரட்சி கவிஞர்" என்ற பட்டமும், அறிஞர் அண்ணா, 'புரட்சிக்கவி' என்ற பட்டமும் வழங்கினர். தமிழ்நாடு மாநில அரசாங்கம், அவரது நினைவாக ஆண்டுதோறும் ஒரு தமிழ் கவிஞருக்கு 'பாரதிதாசன் விருதினை' வழங்கி வருகிறது மற்றும் 'பாரதிதாசன் பல்கலைக்கழகம்' என்ற பெயரில் ஒரு மாநில பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளியில் நிறுவப்பட்டது.

- 1946 — அவரது "அமைதி-ஊமை" என்ற நாடகத்திற்காக அவர் 'தங்கக் கிளி பரிசு' வென்றார்.
- 1970 — அவரது மரணத்திற்குப் பின், அவரது 'பிசிராந்தையார்' நாடகத்திற்காக அவருக்கு 'சாஹித்ய அகாடமி விருது' வழங்கப்பட்டது
- 2001 — அக்டோபர் மாதம் 9ஆம் தேதி, சென்னை தபால் துறை மூலமாக ஒரு நினைவு அஞ்சல்தலை அவரது பெயரில் வெளியிடப்பட்டது.




## இறப்பு

எழுத்தாளர், திரைப்படக் கதாசிரியர், கவிஞர், அரசியல்வாதி என்று பன்முகம் கொண்ட பாரதிதாசன் அவர்கள், ஏப்ரல் மாதம் 21ஆம் தேதி, 1964 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். 1970: அவரது மரணத்திற்குப் பின், அவரது 'பிசிராந்தையார்' நாடகத்திற்காக அவருக்கு 'சாஹித்ய அகாடமி விருது' வழங்கப்பட்டது.

நன்றி
https://www.itstamil.com/


அகர முதல நாளை நமதே
அழகு நம்மை ஆளக் கூடாது..
அறிவுதான் ஆளவேண்டும்..
அவசரம் நம்மை ஆளக்கூடாது..
நிதானம் தான் நம்மை ஆளவேண்டும்
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com